Crmp No.884/2021, நாள்: 15.04.2021

ம.சா.2—— முனிலால் என்பவரின் வாக்குமூலம்

நான் அனகோடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். புகார்தாரரை தெரியும். வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 13.12.2020ம் தேதி காலை 8.45 மணியளவில் நான் என்னுடைய நிலத்தில் விவசாய வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்போது என் அண்ணார் வீட்டின் அருகே இருந்தார். நான் கேழ்வரகு பயிர் கொத்திக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. அப்போது என் அண்ணாரை எதிரிகள் அடித்துக்கொண்டிருந்தார்கள். எதிரிகள் பழனி, வெங்கடேசன், உமாசங்கர், சிவா, மாணிக்கம், செந்தில்குமார் ஆகியோர் கொம்பு மற்றும் கத்தியை கொண்டு என் அண்ணாரை அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் தடுக்க சென்றபோது என்னையும் எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள். என்னுடைய பனியன் எதிரிகள் அடித்ததில் கிழிந்துவிட்டது. அடிப்பட்ட நாங்கள் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். நாங்கள் புகார் கொடுத்த பின்னிட்டு காவல் ஆய்வாளர் எதிரிகளை அழைத்து சமாதானம் செய்து அனுப்பிவைத்தனர். எதிரிகள் மீண்டும் எங்களை வந்து பிரச்சனை செய்தார்கள். பின்னர் போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தோம். காவல் ஆய்வாளர் நாங்கள் கொடுத்த புகாருக்கு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு மனு செய்தோம். அதன் பிறகும் போச்சம்பள்ளி காவல் ஆய்வாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கனம் நீதிமன்றத்தை வேண்டுகிறேன்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.